## கலைஞர் ஆட்சியின் போதும், ஜெயலலிதா ஆட்சியின் போதும் ‘நீட்’ தேர்வு வரவில்லை!

## அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தாமதமான நடவடிக்கை மூலம் அலட்சியம் காட்டியவர்கள் பேசலாமா?

# ‘டங்ஸ்டன்’ விவகாரத்தில் போராடியவர்கள் மீதான வழக்கு ரத்து!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுக்கடுக்கான ஆணித்தரமான பதில்!

**சென்னை, ஜன.12–**

**சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசும்போது, நீட், டங்ஸ்டன், பல்கலைக் கழக மாணவி பாலியல் வழக்கு குறித்து பேசினார்.**

**அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு, கலைஞர் ஆட்சியிலும், உங்களுடைய அம்மையார் ஆட்சியிலும் நீட் தேர்வு தமிழ்நாட்டில் நுழையவில்லை என்றும், பொள்ளாச்சி பாலியல் வழக்கில் புகார் கொடுத்த 12 நாட்களுக்குப் பிறகே வழக்குப்பதிவு செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டதுடன் ‘டங்ஸ்டன்’ விவகாரத்தில் போராடியவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை ரத்து செய்ய பரிசீலிக்கப் படும் என்றும் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசும்போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனுக்குடன் குறுக்கிட்டு அளித்த ஆணித்தரமான பதில்கள் வருமாறு:–

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இரண்டு நாட்களாக உடல் நலம் இல்லாமல், இந்த அவைக்கு வர இயலாத சூழ்நிலை ஏற்பட்டு, இன்று அவைக்கு வந்திருக்கிறார்கள். எனவே, அவரது உடல்நலம் மேலும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

### போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலை!

அதே நேரத்தில் இந்த அவையில் அவர் உரையாற்றியபோது, ஆளுநர் உரையை கடந்த ஆண்டு அவர்கள் அவையில் படித்த நேரத்தில், அவர் சில வார்த்தைகளை விட்டுவிட்டு உரையாற்றினார். அப்பொழுது போராட்டம் நடத்தவில்லை, இப்பொழுது முழுவதுமாக படிக்காமல் போயிருக்கிறார்கள். இப்பொழுது ஏன் போராட்டம் என்று அவரே கேள்வி கேட்டு அவரே அதை பதிலாகப் படித்திருக்கிறார். அப்பொழுதாவது ஏதாவது படித்திருக்கிறார், இப்பொழுது முழுவதுமாக படிக்காமல் சென்றிருக்கிறார்கள். அதனால்தான் நாங்கள் உடனடியாகப் போராட்டம் நடத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதனால்தான் போராட்டம் நடத்தினோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, நாங்கள் போராட்டம் நடத்தினால் கைது செய்கிறீர்கள், வழக்குப் போடுகிறீர்கள். ஆனால், ஆளும்கட்சி போராட்டம் நடத்துகிறபோது ஏன் கைது செய்யவில்லை, வழக்குப் போடவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். உறுதியாகச் சொல்கிறேன், ஆளும்கட்சியைப் பொறுத்தவரைக்கும் அனுமதிக்கப்பட்டிருக்கக் கூடிய இடத்தில்தான் அந்தப் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் அவ்வாறான போராட்டங்கள் அனுமதிக்கப்படாத சில இடங்களில் நடைபெற்றபோது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. அதைப்போன்று எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் போராட்டம் நடத்தும்போது அனுமதி இல்லாமல் போராட்டம் நடத்தினால், அனுமதிக்கப்பட்டிருக்கின்ற இடத்தைத் தவிர பிற இடங்களில் போராட்டம் நடத்தினால், நிச்சயமாக கைது செய்யப்படும், வழக்குப் போடப்படும். இதுதான் நிலைமை, இதுதான் சட்டம்.

உங்களிடத்தில் மட்டுமல்ல. எங்களிடத்திலும் record இருக்கிறது. எங்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அங்குதான் அனுமதி தரமுடியும். அனுமதியில்லாத இடங்களில் கூட்டம் நடத்துகிறபோது, சில நேரங்களில் நீதிமன்றத்திற்குச் சென்று அனுமதி பெறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் மறுக்கவில்லை. அதேபோல் நீங்கள் ஆளும் கட்சியாகவும், நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பல இடங்களில் கூட்டங்கள் நடத்த அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அப்போது நாங்களும் நீதிமன்றத்திற்குச் சென்று அனுமதியை வாங்கிய பிறகு கூட்டங்களை நடத்தியிருக்கிறோம். அதற்கும் எங்களிடத்தில் ஆதாரம் இருக்கிறது. எனவே, இது ஒன்றும் புதியது அல்ல.

### நீட் தேர்வு ரத்து!

நீட் தேர்வைப் பொறுத்தவரைக்கும் நீதிமன்றத்தில் ஓர் ஆண்டுகாலமாக கிடப்பில் இருந்த கதைகள் எல்லாம் நீங்கள் மறந்துவிடக் கூடாது, உங்கள் ஆட்சிக் காலத்தில். அந்தப் பிரச்சினைக்கு அதிகம் செல்ல விரும்பவில்லை. நாங்கள் நீட் தேர்வு வந்தால், நிச்சயமாக எங்கள் ஆட்சி வந்தால், அதை ரத்து செய்வதற்கான முயற்சியில் முழுமையாக ஈடுபடுவோம். அதை ரத்து செய்வதுதான் எங்களுடைய வேலை என்று சொன்னோம் மறுக்கவில்லை. அதேநேரத்தில் எங்களுடைய கூட்டணிக் கட்சியுடைய தலைவர்களில் ஒருவராக இருந்த ராகுல் காந்தி அவர்கள்கூட உறுதியளித்திருந்தார். இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் நிச்சயமாக நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்று. ஆனால், ஆட்சிக்கு வரவில்லை. இப்போது வந்திருக்கிறது உங்களுடைய ஆதரவோடு இருக்கக்கூடிய பா.ஜ.க. ஆட்சி. மன்னிக்கவும், உங்களுடைய ஆதரவு இருந்த பா.ஜ.க. ஆட்சி. அதை நீங்கள் செய்திருக்கலாம். ஆனால் நிச்சயம் சொல்கிறோம், உறுதியாகச் சொல்கிறோம். அதிலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது. இப்போதுகூட, இந்த கவர்னர் உரையில் கூட அதை சுட்டிக்காட்டியிருக்கிறோம். எனவே, அதில் எந்தவிதமான மாற்றுக்கருத்தும் கிடையாது.

நாங்கள் கூட்டணியில் இருந்தவரையில், அதற்குப் பிறகு தொடர்ந்து இருந்தவரையில் நீட் தேர்வு உள்ளே நுழையவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன், உங்கள் அம்மையார், உங்களால் அம்மாவாகப் போற்றப்படக்கூடிய முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இருந்தவரையில்கூட வரவில்லை. நீங்கள் வந்த பிறகுதான் வந்தது. அதை மறந்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் ஆட்சிக்கு வந்தால், நீட் தேர்வை இரத்து செய்வதற்கான முயற்சியில் ஈடுபடுவோம் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, எங்களால் எப்படி இரத்து செய்ய முடியும்? சராசரியாக இருக்கக்கூடிய அனைவருக்குமே இது தெரியும். யார் அதை இரத்து செய்ய முடியும்? தமிழ்நாடு அரசா இரத்து செய்ய முடியும்? மாநில அரசா இரத்து செய்ய முடியும்? மத்திய அரசுதான் அதை இரத்து செய்ய முடியும். அதனால்தான், அதை நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

முதல் கையெழுத்துப் போடுவோம் என்று யாரும் சொல்லவில்லை. அதையெல்லாம் ஆதாரமில்லாமல் சொல்லாதீர்கள். இரத்து செய்வதற்கான முயற்சியில் ஈடுபடுவோம் என்றுதான் சொல்லியிருக்கிறோமே தவிர, முதல் கையெழுத்துப் போடுவோம் என்று சொல்லவில்லை. அதில் எப்படி நாங்கள் கையெழுத்துப் போட முடியும்? இரத்து செய்வதற்கு நாங்கள் எப்படி கையெழுத்துப் போட முடியும்?

### சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்!

தேர்தலுக்கு முன்னர் என்ன பேசினோம்? இப்போது என்ன பேசுகிறோம் என்பதைச் சொல்லுங்கள். ஆதாரத்தோடு நாங்கள் பதில் சொல்கிறோம். நாங்கள்தான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறோமே! என்ன பேச்சு பேசினோம் என்பதை சொல்லச் சொல்லுங்கள். நாங்கள் ஒரே பேச்சுதான் பேசுவோம். சொன்னதைச் செய்வோம். செய்வதைத்தான் சொல்வோம்.

நீதிமன்றத்தில் இருந்தது என்று அவரே சொல்கிறார். நீதிமன்றத்தில் இருந்ததை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். நீதிமன்றத்தில் இருந்தது வெளியில் தெரியவே இல்லை. ஓராண்டிற்குப் பிறகுதான் நாட்டிற்குத் தெரிந்தது. நீங்கள்தான் ஆட்சியில் இருந்தீர்கள். அதை ஏன் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கிடையில் பலமுறை சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றது. அப்போதுகூட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கவில்லையே. இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம்.

அவர் தவறாகப் புரிந்துகொண்டு சொல்கிறார்கள். உங்கள் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த அந்த நீட் மசோதா, அந்தச் சட்டம், நீட் தேர்வு பிரச்சினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தத் தகவலை நீங்கள் ஏன் சபைக்குத் தெரிவிக்கவில்லை. ஓராண்டாக நீதிமன்றத்தில் இருந்ததை நீங்கள் ஏன் சபைக்குத் தெரிவிக்கவில்லை. அதைத்தான் நான் கேட்கிறேன். எனக்குத் தெரியவில்லை என்று கேட்கவில்லை. உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதை நீங்கள் மறைத்திருக்கிறீர்கள். அதைத்தான் நான் சொல்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறானத் தகவலைப் பதிவு செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் கூட்டணியில் இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பொழுதே எங்களுடைய தலைவர் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் அப்பொழுதே நீதிமன்றத்திற்குச் சென்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரை விதிவிலக்கு வாங்கி வைத்திருந்தார்கள். அதேபோல உங்களுடைய தலைவராக உங்களுடைய முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவரும் பொறுப்பில் இருந்த வரையில் நீட் தேர்வு உள்ளே நுழைய முடியவில்லை. ஆனால், அதற்குப் பிறகு என்ன நிலை? நாங்கள் என்னவோ பிள்ளையார்சுழி போட்டோம், பிள்ளையார்சுழி போட்டோம் என்று சொல்கிறீர்களே நாங்கள்தான் துவங்கி வைத்தோம் என்று சொல்கிறீர்களே, அதல்ல நான் கேட்கிற கேள்வி, ஓராண்டு காலம் நீதிமன்றத்திற்கு வந்து காத்திருக்கிறது, தூங்கிக் கொண்டிருக்கிறது. அதைப் பற்றி என்ன செய்தி என்பதக்கூட இந்த அவைக்குத் தெரிவிக்கவில்லை நீங்கள். அதைவிட என்ன மானக்கேடு வேண்டும் உங்களுக்கு? இதற்கு பதில் சொல்லுங்கள்.

இப்போதும் சொல்கிறோம் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வு நிச்சயமாக இரத்து செய்யப்படும். அதில் எந்த மாற்றமும் கிடையாது. இப்போதும் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது இருந்த சூழ்நிலையில்வந்தது. வந்த நேரத்தில் நாங்கள் அதை எதிர்த்து இருக்கிறோம். நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. நீதிமன்றத்திற்குச் சென்று தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு பெற்றிருக்கிறோம்.

தேர்தல் நேரத்தில் கூட்டணிகள் சேரும். அதற்குப் பிறகு விலகும். அது எதார்த்தமாக நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள்கூடத்தான் சென்றமுறை BJPயுடன் கூட்டணி வைத்தீர்கள். இப்போது விலகி வந்திருக்கிறீர்கள். என்ன இது? நீங்கள் என்ன உதாரணம் கொடுக்கிறீர்கள்? (கலைஞர் நாணயம் வெளியீட்டு விழாவிற்கு மத்திய அமைச்சரை அழைத்தது குறித்து எடப்பாடி பழனிசாமி பேசினார்).

அதில் என்ன தவறு? என்ன தவறு என்று சொல்லுங்கள். என்ன தவறு என்று சொல்லுங்கள். மத்தியில்



இருக்கக்கூடிய அமைச்சர், அதுவும் பாதுகாப்புத் துறை அமைச்சர். பிரதமரையும் அழைத்தோம். பிரதமர்தான் வரமுடியாது நான் பாதுகாப்புத் துறை அமைச்சரை அனுப்பி வைக்கிறேன் என்று சொன்னார். இன்னும் சொல்லப்போனால் ஜனாதிபதியை அழைக்க முயற்சி செய்தோம். ஆனால், வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதனால்தான் தலைவருக்கு மரியாதை கொடுக்க வேண்டும். இந்தியாவினுடைய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் வந்தால்தான் மரியாதை கிடைக்கும் என்பதற்காக அழைத்து வந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் என்ன தவறு? சொல்லுங்கள்.

கவர்னர் சொல்லக்கூடிய அனைத்தையும் நாங்கள் எதிர்க்கிறோம். அவரை எதிர்த்துத்தான் சில அறிக்கைகளை விடுகிறோம். கவர்னர் உரை என்பதால் அவருக்குரிய மரியாதை கொடுத்து அவரை உள்ளே அழைத்து வரவில்லையா! அதுமாதிரிதான்.

### நான்கு வேஷம் போடுபவர்கள்

இரட்டை வேடம் நாங்கள் போடுபவர்கள்தான். நீங்கள் நான்கு வேடம் போடுகிறீர்களே அதற்கு என்ன சொல்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் இரட்டை வேடம் என்று சொல்லலாமா? நான்கு வேடம் என்று சொல்வதற்கே இவ்வளவு கோவம் வருகிறதே அப்போது இரட்டை வேடம் என்று சொன்னால் எங்களுக்குக் கோவம் வராதா?

மன்னிக்க வேண்டும், அது அரசு நிகழ்ச்சிதான். அரசு நிகழ்ச்சிதான். ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறபோது பொறுப்புத்தன்மையுடன் பேச வேண்டும்.

தவறான தகவல்களைப் பதிவு செய்யக்கூடாது. இது கட்சி நிகழ்ச்சி அல்ல. பாதுகாப்புத் துறை அமைச்சர் வந்தது அரசு நிகழ்ச்சிதான். அரசு நிகழ்ச்சிதான் நடந்தது. ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். கட்சி நிகழ்ச்சி என்பதற்கு ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள்.

யார் தூங்கிக்கொண்டிருந்தார்கள் என்பது நாட்டிற்கே தெரியும். தூங்கிக்கொண்டிருந்த காரணத்தினால்தான் செம்பரம்பாக்கம் ஏரி சென்னை மாநகரத்தையே மூழ்கடித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரலாறு எல்லாம் மறந்து விடக்கூடாது.

### நாற்பதுக்கு நாற்பது வெற்றி!

எள்ளி நகையாடுகிறவர் யார் என்பது நாட்டுக்குத் தெரியும். அதனால்தான் நாற்பதுக்கு நாற்பது வெற்றியை நாடாளுமன்றத்தில் நாங்கள் பெற்றோம் என்பதும் நாட்டுக்குத் தெரியும். (மேசையை தட்டும் ஒலி)

### டங்ஸ்டனுக்கு ஆதரவு தெரிவித்தது யார்?

அந்த டங்ஸ்டனுக்கு யார் ஆதரவு தெரிவித்து, மாநிலங்களவையில் பேசியது என்பது நாட்டிற்கும் தெரியும். (மேசையை தட்டும் ஒலி)

நான் சொன்னதை, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மட்டுமல்ல; இந்த அவையிலுள்ள அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் தம்பிதுரை அவர்கள், ஒன்றிய அரசு, மாநில அரசுகளின் உரிமையைப் பறிக்கும்போது எப்படி அதற்கு ஆதரவு தெரிவித்துப் பேசினார் என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தத் திருத்தச் சட்டத்தைக் கண்டித்து வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். வாக்கெடுப்பு நடைபெற்ற நேரத்தில் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இதுதான் உண்மை, இதுதான் உண்மை. இதைப் புரிந்துகொள்ளுங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்று அவர் அழுத்தந்திருத்தமாக, ஆணித்தரமாக சொல்லியிருக்கிறார். நான் உறுதியாக சொல்கிறேன். அந்த அவையிலே எதிர்ப்பு தெரிவித்தது மட்டுமல்ல, சபாநாயகர் இருக்கைக்கு முன்பு நின்று, Well of the House க்கே சபாநாயகர் இருக்கைக்கு அருகிலேயே சென்று போராட்டமே நடத்தியிருக்கிறார்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறது. இதை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறாரா?

தி.மு.க. மட்டுமல்ல; தோழமைக் கட்சிகளும் சேர்ந்துதான் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. எப்படி முடிந்துவிடும். சட்டத்திருத்தம் கொண்டுவந்தால்தான் எதிர்ப்பு தெரிவிக்க முடியும். சட்டத்திருத்தம் கொண்டுவரும் போது எதிர்ப்பு தெரிவித்திருக்கிறோம். உங்களுடைய உறுப்பினர்தான் ஆதரித்துப் பேசியிருக்கிறார். அதுதான் உண்மை. மாநில உரிமை பறிபோவதை ஆதரித்திருக்கிறார்.

என்ன ஊழல் நடந்திருக்கிறது. அதைத்தான் சொல்லுங்கள்? என்ன ஊழல் நடந்திருக்கிறது. ஏதாவது தி.மு.க.வின் சார்பிலே ஊழல் குற்றச்சாட்டு கைதுசெய்யப்பட்டு நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தண்டனை பெற்று, சிறைக்குப் போனதுண்டா? (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் வரலாற்றைச் சொல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய வரலாறு சொல்ல வேண்டுமா?

### அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள்!

நீங்கள் (எடப்பாடி பழனிசாமி) தினம், தினம் அறிக்கை கொடுத்துக் கொண்டிருப்பீர்கள். நாங்கள் வாய்மூடிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டுமா? (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இத்தனை அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் கண்டு நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) தவறான செய்தியை, உண்மைக்குப் புறம்பான செய்தியை திரும்பத் திரும்ப அதை ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? அதற்கு பதில் சொல்ல வேண்டியது எங்களுடைய கடமை. அதனால்தான் எங்களுடைய அமைச்சர்கள் சொல்கிறார்கள். அதைப் பற்றி நீங்கள் கேள்வி கேட்பதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது.

### குற்றவாளிக்குரிய தண்டனையை வாங்கிக் கொடுப்பதுதான் எங்கள் கடமை!

நான் திரும்பத் திரும்ப சொல்கிறேன். எந்த காரணத்தைக் கொண்டும் நாங்கள் யாரையும் காப்பாற்றுவதற்கு முயற்சிக்க மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது எங்களுக்குத் தேவையும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) குற்றவாளிக்கு உரிய தண்டனையை வாங்கிக் கொடுப்பதுதான் எங்களுடைய கடமை. அதில் எந்த மாற்றமும் கிடையாது. திரும்பத் திரும்ப இதையே அவர் பேசிக் கொண்டிருக்கிறார். திரும்பத் திரும்ப இதையே பேசினால் நான் பொள்ளாச்சி கதையிலிருந்து ஆரம்பிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### பொள்ளாச்சி சம்பவத்தில் 12 நாட்களுக்குப் பிறகு எப்.ஐ.ஆர். பதிவு

பொள்ளாச்சி வழக்கைப் பொறுத்தவரைக்கும், உடனடியாக புகார் வந்தவுடனே FIR போடவில்லை. ஆனால், அண்ணா பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரைக்கும் நடைபெற்றிருக்கக்கூடிய சம்பவத்திலே புகார் கொடுத்தவுடனே FIR போடப்பட்டு, அடுத்த நாளே சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் நீங்கள் ஆட்சியில் இருந்தபோது, பொள்ளாச்சி விவகாரத்தைப் பொறுத்தவரையிலே FIR பதிவு செய்யப்பட்டு, 12 நாட்கள் கழித்துத்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆக இந்த 12 நாட்களில் நடந்தது என்ன? யாரைக் காப்பாற்றும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறீர்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, இதை மூடி மறைத்து, தவறான தகவலை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் இங்கே பதிவு செய்திருக்கிறார். இதுதான் உண்மையானது. உடனடியாக கைது செய்யப்படவில்லை. உடனடியாக FIR போடப்படவில்லை. மிகவும் காலதாமதமாகத்தான் FIR போடப்பட்டிருக்கிறது. 12 நாட்கள் கழித்த பிறகுதான் FIR போடப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை.

திரும்ப, திரும்ப அதையேதான் சொல்கிறேன். நான் எந்த தவறான தகவலும் தரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் தவறான தகவலை தொடர்ந்து இங்கே பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். புகார் கொடுத்து 12 நாள் கழித்துத்தான் FIR போட்டிருக்கிறார்கள். அதன்பிறகு ஒரு மாதத்திற்கு பிறகு, நீங்கள், உங்கள் ஆட்சியில் CBCID விசாரணைக்கு வைத்து இருக்கிறீர்கள். யார் கொடுத்தால் என்ன? எங்கப்பன் குதிருக்குள் இல்லை.

### பல்கலைக்கழக மாணவி புகார் கொடுத்த அடுத்த நாளே நடவடிக்கை!

12 நாள் கழித்துத்தான் புகார் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குபிறகு நீங்கள், CBCIDவிசாரணைக்கு போட்டீர்கள். CBI விசாரணை போட்டபிறகு அவர்களெல்லாம் எந்தக் கட்சியை சார்ந்தவர்கள் என்று வெளிப்படையாக அப்போதுதான் வெளியே தெரிய ஆரம்பித்தது. அதுதான் உண்மை. ஆனால், நான் எதற்காக சுட்டிக்காட்டுகிறேன் என்றால், அண்ணா பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் அந்த மாணவிக்கு ஏற்பட்ட கொடுமைக்கு, புகார் கொடுத்த அடுத்த நாளே கைது செய்யப்பட்டு, அதன்பிறகு அவர்மீது குண்டர் சட்டம் போடப்பட்டிருக்கிறது. அதாவது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைக்கூட நீங்கள் தி.மு.க., காரர், தி.மு.க., காரர் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சொல்லிக் கொண்டிருங்கள், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், தி.மு.க., அனுதாபிதான், நான் இப்போதும் சொல்கிறேன், எல்லா நிகழ்ச்சிக்கும் வந்து இருக்கிறார். எல்லா functionக்கும் வந்திருக்கிறார், photo எல்லாம் எடுத்துகொண்டு போயிருக்கிறார்.

### அண்ணா நகரில் நடந்தது என்ன?

இரண்டு நாட்களுக்குமுன்பு அண்ணா நகரில் நடந்தது என்ன? அ.தி.மு.க.வைச் சேர்ந்த வட்டச்செயலாளர்தானே. நீங்கள் உடனே கட்சியை விட்டு நீக்கியிருக்கிறீர்கள். நான் அதை வரவேற்கிறேன். அதுவே தி.மு.க., உறுப்பினராக இருந்தால் நாங்களும் நீக்கியிருப்போம். அவர் தி.மு.க., உறுப்பினர் இல்லை. உறுப்பினராக இல்லாதபோது நாங்கள் எப்படி நீக்கமுடியும். அதனால்தான் பொறுமையாக இருந்து, இன்றைக்கு எல்லா நடவடிக்கையும் எடுத்து இருக்கிறோம். இதுதான் உண்மை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சொல்வதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ளவில்லையா என்னவென்று தெரியவில்லை. புகார் கொடுத்து 12 நாள் கழித்துத்தான் FIR பதிவு செய்து இருக்கிறீர்கள். புகார் கொடுத்து 12 நாள் கழித்துத்தான் FIR பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை.

அவர்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய தகவலின் அடிப்படையில், அது உண்மையோ தவறோ அவர் சொல்கிறார். ஆனால் நான் சொல்வதில் எந்த மாற்றமும் கிடையாது. திரும்ப, திரும்ப சொல்கிறேன், இரண்டு வருடம் இந்த பாலியல் தொல்லை நடந்து இருக்கிறது. யார் ஆட்சி? உங்கள் ஆட்சி. பொள்ளாச்சியில் இரண்டு வருடங்கள் பாலியல் தொல்லை நடந்திருக்கிறது. அதுகுறித்து புகார் அளிக்கவே இரண்டு வருடங்கள் ஆகியிருக்கின்றன. புகார் கொடுத்த பிறகு FIR போடுவதற்கு 12 நாட்கள் ஆகியிருக்கிறது. இதுதான் உண்மை. திரும்ப திரும்ப சொல்கிறேன், அதற்கு பிறகுதான் நீங்கள் CBCID விசாரணை போட்டீர்கள். CBI விசாரணையில் யார், யார் என்ற பெயரெல்லாம் வெளியில் வந்திருக்கிறது. நான் அதை வெளியில் சொல்ல விரும்பவில்லை. அது CBI விசாரணையில் இருக்கும் காரணத்தினால், இம்மன்றத்தின் கண்ணியம் கருதி நான் பெயரையெல்லாம் சொல்ல விரும்பவில்லை. இதுதான் உண்மை! உண்மை! உண்மை!

நான் சொல்வது உண்மையில்லை, உண்மையில்லை என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறார். அவரும் இல்லை, இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார், நானும் இல்லை, இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றால், நாளைக்கு ஆதாரத்தை நான் சபாநாயகர் அவர்களுடைய அறையில் வந்து கொடுக்கிறேன். அவரும் கொடுக்கட்டும். அதற்கு பிறகு சேர்ந்து முடிவெடுக்கலாம். முடிவுக்கு கட்டுப்பட்டு, அதற்குரிய விளக்கத்தை அவர் பெற்றுக் கொள்ளட்டும்.

பொள்ளாச்சி சம்பவத்தை நாங்கள் ஏன் விவாதமாக காட்டுகிறோம் என்றால், நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. காலம்தாழ்ந்து எடுத்தீர்கள். ஆனால், எங்கள் ஆட்சியில், அடுத்த நாளே உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதனால்தான் அதை ஒப்பிட்டு பேச வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்பட்டது. நடவடிக்கை எடுத்திருந்தால், அதை பேச வேண்டிய அவசியம் இல்லையே?

காலம் தாழ்ந்து எடுத்த நடவடிக்கையை அவர்கள் நியாயப்படுத்தி பேசுகிறார்கள். இப்போது, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சம்பவத்திற்கு உரிய நேரத்தில், உரிய நடவடிக்கையை எவ்வளவு வேகமாக எடுத்திருக்கிறோம். அதைப்பற்றி ஏன் நீங்கள் பேசுகிறீர்கள்? அதைப்பற்றி ஏன் திரும்ப, திரும்ப பேசுகிறீர்கள்? அதற்கு ஏன் ஆர்ப்பாட்டம் நடத்திக்கொண்டிருக்கிறீர்கள்? அதற்காக ஏன் கருப்பு சட்டை அணிந்து கொண்டு வருகிறீர்கள்? அதற்காக ஏன் badge அணிந்துகொண்டு வருகிறீர்கள்? அதற்கு விளக்கம் சொல்லுங்கள். நீங்கள் கேட்கிறீர்கள் இல்லையா, நாங்கள் பொள்ளாச்சி சம்பவத்தைப் பற்றி பேசக்கூடாது, ஏன் பேசுகிறீர்கள் என்று கேட்கிறீர்கள் இல்லையா?

நீங்கள் திருப்பி, திருப்பி சொன்னதால், நாங்களும் திருப்பி, திருப்பி சொல்கிறோம். 24 மணி நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. Correct ஆக 12 நாட்கள் ஆகியிருக்கிறது FIR போடுவதற்கு.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சவால்!

நீங்கள் சபாநாயகரிடம் நிரூபிக்கவில்லையென்றால், அதற்குரிய தண்டனையை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா? நீங்கள் சொல்கிற தண்டனையை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். சொல்லுங்கள் முதலில். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இங்கே பாருங்கள். நான், சொன்னதை நிரூபிக்கவில்லையென்றால் நீங்கள் சொல்கிற தண்டனையை ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள், சொன்னதை நிரூபிக்கவில்லையென்றால், நான் சொல்வதை ஏற்றுக்கொள்ள தயாரா? சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

24.2.2019 அன்று புகார் கொடுத்ததாகச் சொல்கிறீர்கள். புகார் கொடுக்கப்பட்டு FIR போட்ட தேதி எப்போது என்று சொல்லவில்லையே?

FIRக்குப் பதில் சொல்லவில்லை. FIR போட்டது எப்போது? நான் அதைத்தான் சொல்கிறேன். புகார் கொடுத்து 12 நாட்கள் கழித்துத்தான் FIR போட்டிருக்கிறார்கள். அதைச் சொல்லுங்கள். அவரே சொன்னார் இப்போது 24.2.2019 அன்று புகார் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். சரி, FIR போட்டது எந்தத் தேதி அதைச் சொல்லுங்கள்.

### டங்ஸ்டன் போராட்ட வழக்குகள் இரத்து செய்ய பரிசீலிக்கப்படும்!

Tungsten விவகாரத்தைப் பொறுத்தவரையில், அந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய பொதுமக்கள், பேரணிகள் நடத்தி, அதனால் அவர்கள்மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. எனவே, அதுகுறித்து இந்த அவையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டு, அவர்கள்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தும் இரத்து செய்யப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அது நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணித்தரமாக பதிலளித்தார்.

> **“நீங்கள் சபாநாயகரிடம் நிரூபிக்கவில்லையென்றால், அதற்குரிய தண்டனையை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா? நீங்கள் சொல்கிற தண்டனையை நான் ஏற்றுக்கொள்ளத் தயார்.**
>
> **சொல்லுங்கள் முதலில். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே! நான், சொன்னதை நிரூபிக்கவில்லை யென்றால் நீங்கள் சொல்கிற தண்டனையை ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள், சொன்னதை நிரூபிக்க வில்லையென்றால், நான் சொல்வதை ஏற்றுக்கொள்ள தயாரா?”**